Celebrate Listen Walk (cf. Is 2:2-5)
MPC2026

# தேர்ந்து தெளிதல்

## செவிமடுத்தலில் இருந்து செயல்

ஒவ்வொரு சிறிய குழுவும் தாங்கள் ‘‘நாம்’’ என்ற கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளவும், தூய ஆவியார் எதற்கு அழைத்தார் என்று உணர்வதில் கவனம் செலுத்தவும் அழைத்தல். அதிசவாக, அன்றாட வாழ்க்கையில் ‘எளிய செயலைச் செய்ய’ வேரூன்ற உதவும் ஒரு வார்த்தையை அடையாளம் காணுதல்.

எடுத்துக்காட்டு:

- அதிச அல்லது பங்குச் சமூகமாக, நமது திருஅவையின் பிற பணிக்குழுக்களுடன் இணைந்து செயல்களைத் திட்டமிடுதல்.
- அதிச வாக, நமது சுற்றுப்புறத்திலும் பணிபுரியும் இடத்திலும் சீடத்துவத்தை ஊக்குவித்தல்.

## பரிந்துரை இறைவேண்டல்

வழிநடத்துனர் பங்கேற்பாளர்களை சுருக்கமான இறைவேண்டலைச் செய்ய அழைத்தல்.

எடுத்துக்காட்டு:

- எங்களைச் சுற்றியுள்ள அனைவருக்கும் உமது நற்செய்தியை அறிவிக்கும் பணியில். நாங்கள் சாட்சிகளாகத் திகழ எங்களுக்குக் கற்றுத்தாரும்.
- ஆண்டவரே, ஒரு புதிய தொடக்கத்திற்கான நம்பிக்கையுடன், நற்செய்திப் பணியாளர்களாக எங்கள் பணியைச் செய்திட எங்கள் கண்களைத் திறக்க உதவியருளும்.

பதிலுரை: ‘‘ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.’’

## நிறைவு இறைவேண்டல்:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, உமது உடனிருப்பால் எங்களைப் புதுப்பிக்கிறீர்; வாழ்வளிக்கும் உமது வார்த்தையால் எங்களுக்கு வலுவூட்டுகிறீர். மற்றவர்களின் சுமைகளை, குறிப்பாக வாழ்விற்குத் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாதவர்களின் சுமைகளை, எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பதையும், தாழ்மையான அக்கறை மற்றும் சேவையின் மூலம் அவர்களுக்கு எவ்வாறு புத்துணர்ச்சி அளிப்பது என்பதையும் எங்களுக்குக் காட்டியருளும். ஆமென்.



## நிறைவுப் பாடல்:

இறைவா எனக்கொரு ஆசை - 2
உனை முகமுகமாய் நான் தரிசிக்கணும்
உன் திருப்பதமே நிதம் அமர்ந்திடணும்

1. அதிகாலைத்துளி விழும்போது உன் முகம்
தெரிந்திடவேண்டும்
எழுந்து நான் நடந்திடும்போது உன் கரம்
பிடித்திட வேண்டும்
வீதியில் வலம்வரும் போது
உன்துணை உணர்ந்திட வேண்டும் (2)

தனிமையில் நான் வாடும்போது நண்பனாய்
அருகில் வேண்டும்
என் ஆசை ஆசை ஆசை நீயே இறைவா
என் ஆசை ஆசை ஆசை உன் இல்லம்
தலைவா (2)

2. கேள்விகள் எனில் எழும் போது பதில்கள்
நீ தரவேண்டும்
தவறுகள் செய்திடும் போது மன்னிப்பு
வழங்கிட வேண்டும்
நம்பிக்கை தளர்கின்ற போது நெஞ்சுரம் நீ
தர வேண்டும் (2)
வாழ்க்கையின் அசைவினில் எல்லாம்
உன் அருள் பொழிந்திட வேண்டும் - என்
ஆசை ... ...

ஆதாரம்: Bibleintamil.com 0638

**வெளியீடு:** மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org INTERNAL CIRCULATION ONLY

அக்டோபர் 2026

# அதிசசிந்தனை

ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்
மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்



மாதாந்திர நோக்கம்:




# திருஅவை: மறைத்தூதுரைக்கும் சீடர்களாக இருத்தல்

“எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்;
தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்.”
(மத்தேயு 28:19)

தூதுரைப் பணியில் ஈடுபடும் சீடத்துவம் என்பது புனிதத்தின் உச்சநிலை மட்டுமல்ல, அது உறவின் ஆழமும் ஆகும். இது இயேசுவையும் அவரது திருஅவை, மற்றும் ஒருவரையொருவர் ஆழமாக அறிந்துகொண்டு, அவர்களுக்குப் பணி செய்து வளரும் ஒரு பயணமாகும். சீடர் என்பவர் கிறிஸ்துவுடனான தனது உறவில் ஆழமாக இணையவும், மற்றவர்களை அவரோடுள்ள உறவுக்கு வழிநடத்தவும் முயல்பவர் ஆவார்.

# எதிர்கொள்வது

## தொடக்கப் பாடல்:

இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்
திரும்பிப் பார்க்கமாட்டேன் – 2
சிலுவையே முன்னால் உலகமே பின்னால் –2
இயேசு சிந்திய குருதியினாலே விடுதலை
அடைந்தேனே

1. அச்சமும் இல்லை அதிர்ச்சியும் இல்லை
அடியேன் உள்ளத்திலே
ஆண்டவர் இயேசு அடைக்கலப் பாறை
ஆதலின் குறையில்லை
ஆண்டவர் முன்னால் அகிலமே பின்னால் – 2
அன்பர் இயேசுவின் வார்த்தையினாலே
விடுதலை அடைந்தேனே

2. தாயும் அவரே தந்தையும் அவரே
தரணியில் நமக்கெல்லாம்
சேயர்கள் நம்மைச் செவ்வழி நடத்தும்
தெய்வம் அவரன்றோ
ஆயனே முன்னால் அனைத்துமே பின்னால்
– 2
அழைக்கும் இயேசுவின் அன்பு மொழியிலே
ஆறுதல் அடைந்தேனே

## தொடக்க றைவேண்டல்:

ஆண்டவரே, உம் சீடர்களுக்கு நீர் அருளியது போலவே, வழிதவறியவர்கள் மீது அக்கறை காட்டும் இதயத்தை எனக்கும் அருளுமாறு வேண்டுகிறேன். என்னைச் சுற்றியுள்ளவர்களிடமும், உம்மை இன்னும் அறியாதவர்களிடமும் உமது அன்பையும் உண்மையையும் பகிர்ந்து கொண்டு, மனிதர்களைப் பிடிப்பவனாக இருக்க எனக்கு உதவும். என் வாழ்வு உமது அருளுக்குச் சான்றாக அமையட்டும்; என் செயல்கள் மற்றும் வார்த்தைகள் வழியாக மற்றவர்கள் உம்மை அறிய அருளைத் தாரும். முழு இதயத்தோடு உம்மைப் பின்பற்றவும், உமது போதனைகளை என் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கவும் எனக்கு உதவியருளும். இவையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
ஆமென்.

## மேய்ப்புப்பணிப் பாதை

அண்மைய காலங்களில் திருஅவையானது ஒன்றித்துப் பயணித்தல் (synodality) குறித்த தீவிரமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறது; இதில் ஒருவரையொருவர் செவிமடுப்பதன் முக்கியத்துவமும், தனிநபர்களும் குடும்பங்களும் எதிர்கொள்ளும் சவால்களில் அவர்களுக்குத் துணையாக இருப்பதும் வலியுறுத்தப்படுகின்றன. மக்களின் குறைகளைக் கேட்டு அரவணைக்கும் இந்த மேய்ப்புப் பணி இன்றியமையாதது என்றாலும், அது 'உண்மையின் ஒளி'யுடன் இணையாதவரை முழுமையடையாது. நம்பிக்கையாளர்களின் போராட்டங்களை நாம் கேட்க விரும்புகிறோம்; ஆனால், அவர்களின் பாதையில் உண்மையான ஒளியை வீசி, நீடித்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரே காரணி, முறையாக வழங்கப்படும் 'முதியோருக்கான மறைக்கல்வி ' (adult catechesis) மட்டுமே. ஒரு பங்கின் முதிர்ந்த வயதினர் தொடர்ந்து ஆன்மீக ரீதியில் செதுக்கப்பட்டு வளர்க்கப்படாவிட்டால், அந்தச் சமூகம் முழுவதுமே ஒருவித ஆன்மீக ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படும். இத்தகைய தொடர் பயிற்சி இல்லாவிட்டால், இவ்வுலக வாழ்வுச் சூழலைத் தூய்மைப்படுத்தும் தங்கள் தனித்துவமான அழைப்பை நிறைவேற்ற பொதுநிலையினரால் இயலாது.

மலேசியத் திருஅவையின் முன் உள்ள சவால் என்னவென்றால், வெறும் அருளடையாளங்களுக்கான தயாரிப்பு என்ற நிலையிலிருந்து மாறி, வாழ்நாள் முழுவதும் தொடரும் 'மறைத்தூதுரைக்கும் சீடர்கள் ' என்ற நிலையை நோக்கி நகர்வதே ஆகும். உறுதிப்பூசுதல் அருளடையாளத்தோடு மறைக் கல்வி முடிந்துவிடுகிறது என்ற எண்ணத்திலிருந்து நாம் விடுபட வேண்டும். நமது பங்குகள் மறைபரப்புச் சமூகங்களாக மாற வேண்டுமெனில், அச்சமூகங்களை வழிநடத்தும் முதியோர் முதலில் திருத்தூதர் மரபு மற்றும் திருஅவையின் அதிகாரப்பூர்வ போதனை (Magisterium) ஆகியவற்றில் ஆழமாக வேரூன்றியிருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

முறையான பயிற்சி பெற்ற நம்பிக்கையாளர்கள் இல்லாவிட்டால், அடுத்த தலைமுறையினருடனும் ஒட்டுமொத்த மலேசியச் சமூகத்துடனும் திருஅவை தொடர்புகொள்வதும், நமக்குள் இருக்கும் கிறிஸ்தவ நம்பிக்கையை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதும் வெகுவாகக் குறைந்துவிடும். முதியோருக்கான மறைக்கல்விப் பயிற்சியை ஒரு இரண்டாம் பட்ச விஷயமாகக் கருதாமல், நமது தூதுரைப் பணியின் மையப்பகுதியாக உயர்த்த வேண்டும் என்ற உலகளாவிய திருஅவையின் நீண்டகால அழைப்புக்குச் செவிசாய்க்க வேண்டிய நேரம் இது.

*Source: Sustained Adult Catechesis. Article by Deacon Prof Sherman Kuek OFS*

# இறைவார்த்தை

## லூக்கா 1: 39-40

அதன்பின் மரியா புறப்பட்டு
யூதேய மலைநாட்டிலுள்ள ஓர்
ஊருக்கு விரைந்து
சென்றார். அவர் செக்கரியாவின்
வீட்டை அடைந்து
எலிசபெத்தை வாழ்த்தினார்.



# உரையாடல்

## ஆவியில் கலந்துரையாடல்

4–6 பேர் கொண்ட குழுவில் கீழ்க்கண்ட மூன்று சுற்றுகளில் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு பகிர்வுக்குப் பிறகும் ஒரு நிமிடம் அமைதியில் இருப்போம்.

**சுற்று 1** “நான்” என்னும் கண்ணோட்டத்தில் (அமைதியில் தியானிக்க தயாராயிருங்கள். அனைவரும் பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் ஒவ்வொருவரும் 2 நிமிடத்திற்கு மேல் பகிரக்கூடாது. மற்றவருடைய பகிர்வையொட்டி எந்தக் கருத்தும் தெரிவிக்க வேண்டாம்)

- பல்வேறு பணிகளில் (ministries) ஒத்துழைப்பதன் மூலம் மற்றவர்களுடனான என் உறவை நான் வலுப்படுத்துகிறேனா?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 2** “நீங்களும் நானும்” என்னும் கண்ணோட்டத்தில்:
(இப்போது குழுவில் மற்றவர் பகிர்ந்த கருத்துகளுக்குப் பதில் அளிக்க அழைப்பு – ஒவ்வொருவரும் ஒருமுறை மட்டுமே தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.)

அனைவரின் கருத்துகளையும் செவிமடுத்தபின்:

- மற்றவர்களிடமிருந்து நான் கற்றுக்கொண்ட முக்கிய விஷயங்கள் என்ன?

(ஒன்று அல்லது இரண்டு குறிப்புகளைத் தெரிவிக்கவும்)

**சுற்று 3** – ‘நாம்’ என்னும் கண்ணோட்டத்தில்:
(இப்போது வழிநடத்துனர் அல்லது பொறுப்பாளர் அனைவரும் பகிர்ந்துகொண்டவற்றில் இருந்து பொதுவான கருத்தைத் தேர்ந்தெடுக்குமாறு அனைவரையும் அழைப்பார்)

- பிற பணிக்குழுக்களுடன் ணைந்து செயல்படுவது குறித்து, தூய ஆவியானவர் நமது BEC–க்கு என்ன கூறுகிறார்?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)